அரசாங்க நிர்வாக சுற்றிக்கை : 01/2016

எனது இலக்கம் : IAD/GA 03 / විවිධ 11

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07
2016.01.06

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரசாங்க கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

**விளையாட்டு மற்றும் தேகாரோக்கிய மேம்பாட்டு தேசிய வார விசேட தினத்தை செயற்படுத்தல் – 2016 சனவரி 25-30**

சனாதிபதி செயலகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இல. SP/SB/09/15 ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் விளையாட்டுத்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைய 2016 சனவரி 25 ஆந் திகதியில் இருந்து 30 ஆந் திகதி வரை **"விளையாட்டு மற்றும் தேகாரோக்கிய மேம்பாட்டு தேசிய வாரம்"** எனவும், சனவரி 30 ஆந் திகதி விளையாட்டு மற்றும் தேகாரோக்கிய மேம்பாட்டு தேசிய தினம் எனவும் அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் அதிவேகமாக பரவுகின்ற தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக இத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் சிறப்பான ஆரம்பமொன்றை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

02.அதற்மைய 2016 சனவரி 25 திகதி, **"அரசாங்க மற்றும் அரசாங்க சேவை - விளையாட்டு மற்றும் தேகாரோக்கிய மேம்பாட்டு தேசிய வாரம்"** எனப் பெயரிடப்பட்டுள்ளது. சுகதேகிகளான அரச அலுவலர்களினூடாக வினைத்திறனும், விளைதிறனும் வாய்ந்த அரசாங்க சேவையொன்றை வழங்குவதை நோக்காக் கொண்டு சகல அரசாங்க நிறுவகங்களிலும் தேகாரோக்கிய நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக 2016 சனவரி 25 ஆந் திகதி மு.ப. 8.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

**I.** சகல பணியாட் தொகுதியினரதும் முன்னே நிறுவன அல்லது அலுவலக தலைவரினால் தேசியக் கொடியேற்றல்.

**II.** தேசிய கொடியேற்றப்பட்டதன் பின்னர் தேசிய கீதம் இசைத்தல்.

**III.** சுகதேகிகளான அரசாங்க அலுவலர்களினூடாக வினைத்திறனும், விளைதிறனும் வாய்ந்த அரசாங்க சேவையொன்றை வழங்குவது தொடர்பாக தேகாரோக்கிய உடற்பயிற்சிகள் மற்றும் போசாக்கின் முக்கியத்துவம் தொடர்பாக சுருக்கமாக விரைவுரை ஒன்று நடாத்தல்.

**IV.** சகல பணியாட்தொகுதியினரும் அலுவலக உடையில் கலந்துகொள்ளக்கூடியவாறு இலகுவான உடற்பயிற்சி திட்டம் ஒன்றை (15 நிமிடம்) நடைமுறைப்படுத்தல்

03. சுகதேகிகளான அரசாங்க அலுவலர்களினூடாக வினைத்திறனும், விளைதிறனும் வாய்ந்த அரசாங்க சேவையொன்றை வழங்குவதை இலக்காகக் கொண்ட தகுந்த நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தேச்சையாக முன்னெடுப்பதற்கு முன்னுரிமையளித்து செயற்படுமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

ஜே. தடல்லகே
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

பிரதிகள்

1. கௌரவ மாகாண ஆளுநர்கள்
2. சனாதிபதியின் செயலாளர்
3. செயலாளர், விளையாட்டுத்துறை அமைச்சு - தகுந்த தேகாரோக்கிய ஆலோசகர்களை அனைத்து அரசாங்க நிறுவகங்களுக்கும் அனுப்புவதற்காக